பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
உதயன்
சுடர் : 38
கதிர் : 152
வியாழக்கிழமை 27 ஏப்ரல் 2023
சித்திரை 14 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

நெடுந்தீவுப் படுகொலைகள்;

## காயங்களோடு போராடிய நாயும் நேற்று உயிரிழப்பு!



யாழ்., ஏப். 27
நெடுந்தீவு கூட்டுப் படுகொலைகளின்போது, தனது எஜமானை பாதுகாப்பதற்காகப் போராடி வெட்டுக்காயங்களுக்கு உள்ளான »10

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: முழுமையாக ஏற்கமுடியாது!



அலி சப்ரி போர்க்கொடி

கொழும்பு, ஏப். 27
பயங்கரவாதிகளை விசாரித்தல் என்ற பெயரில் அப்பாவிகளை அடைத்து வைத்து விசாரிக்க முடியாது. எனவே, »11

## அரசில் இணைவோமென ஊகிக்கவே வேண்டாம்!

சஜித் பதிலடி



கொழும்பு, ஏப். 27
அரசுடன் இணைந்து பயணிக்கும் எண்ணம் கொஞ்சமும் இல்லை. இதை ஒருபோதும் ஊகிக்க »11

பொருளாதாரத்தில் மீண்டுவருவதற்கு

# நாடாளுமன்றம் முழுதும் அரசாங்கமாக வேண்டும்

ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



**கொழும்பு, ஏப்ரல் 27**
**பொருளாதாரப் பின்னடைவு நிலையிலிருந்து இலங்கை தற்போது மீண்டு வருகின்றது. இந்தப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவதற்கு முழு நாடாளுமன்றமும் அரசாங்கமாக மாறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.** »11

## மருத்துவமனைக்கு அச்சுறுத்தல் 3 இளைஞர்கள் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஏப். 27
புத்தூர் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புப் பிரிவுக்கு சேதங்களை ஏற்படுத்தி, மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் அச்சுவேலிப் பொலிஸாரால் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். »10

## தந்தை செல்வா சதுக்கத்தில் இடிதாங்கி, மோட்டர் மாயம்!

சில மீற்றர்களில் தான் பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த 5 இலட்சம் ரூபா பெறுமதியான இடிதாங்கி மற்றும் 80 அடி நீளமான இடி »10

## பட்டப்பகலில் நகை திருட்டு

தெல்லிப்பழையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 27
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை நான்கு மணியளவில் வீடொன்று உடைக்கப்பட்டு 19 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெல்லிப்பழை பொலிஸ் »10

## அரிசி திருடிய இளைஞன் கைது

யாழ்., ஏப். 27
வறுமை காரணமாக அயல் வீட்டில் »11

## கச்சதீவுப் புத்தர் காணாமற்போனார்!

யாழ்ப்பாணம், ஏப். 27
கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர்சிலை அகற்றப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார். »11

காலாவதித் திகதியில் மோசடி:

## 1,710 சோடாப்போத்தல் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27
காலாவதித் திகதியில் மாற்றம் செய்து விற்பனைக்கு வைக்கப்பட் »10

## குளத்தில் நீராடிய சகோதரர்கள் பலி!





முல்லைத்தீவில் துயரம்

முல்லைத்தீவு, ஏப். 27
முல்லைத்தீவு - வவுனிக்குளத்தில் நீராடிய சகோதரர்கள் இருவர் குளத்தில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளனர்.
மரணச் சடங்கொன்றில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் - மானிப்பாயில் இருந்து சென்ற ரவி சுமன் (வயது - 26), ரவி சந்தோஷ் (வயது-16) ஆகிய சகோதரர்களே உயிரிழந்தவர்களாவர். »11

யாழ். நாவலர் கலாசார மண்டபம்

## மாநகரசபையை வெளியேற்றும் ஆளுநரின் முயற்சிக்குத் தடை

இடைக்காலக் கட்டளை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து, மாநகரசபை வெளியேறவேண்டும் என்று ஆளுநர் செயலகத்தின் ...மைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலக் கட்டளை மே மாதம் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உணவுப் பணவீக்கம்

# பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலிலிருந்து இலங்கை நீக்கம்

கொழும்பு, ஏப். 27

**உணவுப் பணவீக்கத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கையை உலக வங்கி நீக்கியுள்ளது.**

உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் உலக வங்கி வெளியிட்ட பட்டியலில் இலங்கை நீங்கியுள்ளது.

கடந்த ஆண்டு முதல் இலங்கை இந்த சுட்டெண்ணில் இணைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் வெளியிடப்பட்ட சுட்டெண்களில் இலங்கை பல்வேறு நிலைகளில் காணப்பட்டது. தற்போது பணவீக்கம் குறைந்து வருவதால் இலங்கையை இந்த சுட்டெண்ணில் இருந்து நீக்க உலக வங்கி முடிவு செய்துள்ளது. சுட்டெண்ணில் முதல் இடத்தில் லெபனான் 261 சதவீதமாக காணப்படுகிறது. இரண்டாம் மற்றும் மூன்றாவது இடங்களை முறையே ஸிம்பாப்வே மற்றும் ஆர்ஜென்டினா பிடித்துள்ளது. அந்த நாடுகளில் பணவீக்கம் முறையே 128 மற்றும் 107 சதவீதமாக உள்ளது. (ச-இ)



## புலி முத்திரை குத்தினால் பெருமிதமே அடைவேன்!

### சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

தமிழ் மக்களது பிரச்சினைகளை எடுத்துரைக்கும் போது பல்வேறு தடைகளை ஏற்படுத்துவதுடன் புலி என்று முத்திரை குத்தினாலும் அது எனக்குப் பெருமையே என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

சபை அமர்வின் ஆரம்பத்தில் உரையாற்றுவதற்கு எனக்கு போதிய நேரம் வழங்கப்படவில்லை.

நான் எனது மக்களின் பிரச்சினையை சபைக்கு எடுத்துக்கூறும் போது எனது ஒலிவாங்கியை நிறுத்துகின்றனர். அதனை நான் மீண்டும் மீண்டும் கேட்டபோது அமைச்சர் மனுஷ நாணயக்கார என்னைப் புலி எனக் குறிப்பிடுகிறார். இவ்வாறான சதித்திட்டங்களை மேற்கொள்வதால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டேன். புலி என்று முத்திரை குத்துவார்களாயின் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்பேன். அது இந்த நாட்டினுடைய சாபக்கேடு என்றே எண்ணுவேன் - என்றார். (ச-இ)



## தந்தை செல்வாவின் 46ஆவது நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக தலைவரான தந்தை செல்வாவின் 46ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் நேற்றுப் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுவின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது தந்தைசெல்வாவின் உருவச்சிலைக்கும் அவரது சமாதிக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களால் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ.நவரத்தினம் அடிகளார், வடமாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக் குழுத் தலைவர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், தந்தை செல்வாவின் 125 ஆவது ஜெயந்தி தின ஏற்பாட்டுக் குழுத் தலைவர் இ.பேரின்பநாயகம், தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வவுனியா**

தந்தைசெல்வாவின் நினைவுதினம், வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள அவரது சிலையருகே கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டதுடன், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், தமிழரசுக்கட்சியின் முன்னாள் நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராசா, தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-14-66-110)

## பௌத்தத்தை மாத்திரம் பிரதிபலிக்கும்

# தொல்பொருள் சின்னத்தை மாற்றுவதற்கு பிரேரணை

### சுமந்திரனுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப். 27

தொல்பொருள் திணைக்களத்தின் சின்னம் தற்போதுள்ளவாறே பல ஆண்டுகளாக உள்ளது. அதனை மாற்ற வேண்டுமானால் பிரேரணை முன்வையுங்கள். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றினார்.

'தொல்பொருள் திணைக்களத்தின் இலச்சினையில் தாகபையும், தர்மச்சக்கரமும் மட்டுமே உள்ளது. அது பௌத்தசாசன அமைச்சின் சின்னமா என்று எண்ணத் தோன்றுகிறது. தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரமே பிரதிபலிக்கிறது. அந்தத் திணைக்களம் எதனைப் பாதுகாக்க முயல்கிறது என்பதை அதன் இலச்சினை பிரதிபலிக்கிறது. அது ஏனைய மத அடையாளங்களை அழிக்க முயல்கிறது. வெடுக்குநாறி மலை மதச் சின்னங்கள் அழிப்பு தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி என்ற வகையில் விடயமொன்றைக் கூற விரும்புகிறேன். தற்போது அங்குள்ள இந்து மத சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, அங்கு வழிபாடுகளை தடுக்கும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அதற்கு எதிராக பல வழக்குகளும் தொடரப்பட்டன. அவர்களால் அதனைத் தடுக்க முடியவில்லை. தற்போது, ஜீப்களில், கட்டை காற்சட்டை அணிந்துவந்த இனந்தெரியாதோரால் மத சின்னங்கள் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர் - என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, அவ்வாறான மத சின்ன அழிப்புக்கு இந்த அரசாங்கம் இடமளிக்கவில்லை. இது முற்றிலும் பொய்யான கருத்து. தொல்பொருள் திணைக்களத்தின் இலச்சினை, இன்று நேற்று அல்ல அது பல வருடங்களுக்கு முன்னதாக உருவாக்கப்பட்டதொன்று. எனவே, எந்த மதத்துக்கும் நாம் வேறுபாடுகளை காட்டுவதில்லை - என்றார்.

இதனையடுத்து சுமந்திரன், இந்த இலச்சினையை தற்போது மாற்றுமாறு கோரிக்கை விடுத்தார். அதற்குப் பதிலளித்த அமரவீர, நாடாளுமன்றில் பிரேரணையொன்றை கொண்டு வருமாறு அறிவித்ததுடன், விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய சுமந்திரன், தாம் வன்முறையை விரும்பவில்லை என்றும், அரசாங்கத்தின் இனவாத நோக்கிலான செயற்பாடுகள் களையப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், அரச இயந்திரம் இனப்பாகுபாட்டைக் காட்டியவாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்திலும் அதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு - கிழக்கு தொடர்பில் ஏதேனும் கேள்வி கேட்டால் முன்வரிசையில் இருக்கும் அமைச்சரே எங்களை பயங்கரவாதி என்று கூறுமளவுக்கு நிலைமை உள்ளது. நியாயமான முறையில் இருக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அவ்வாறு இருக்காவிட்டால் அதனை வெளிப்படுத்தும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது. அதனை வெளிப்படுத்தி அதனை கவனிக்காமல் இருக்கும் போது நாங்கள் இப்போது செய்வதை போன்று ஒத்துழையாமை இயக்கத்தை செய்யும் கட்டாயம் எழுந்துள்ளது. கதவடைப்பு மட்டுமன்றி வெகுவிரைவில் சட்ட மறுப்பு போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டியதாக இருக்கும் என்பதனையும் இந்த அரசாங்கத்துக்கு கூறிக்கொள்கின்றோம்' என்று எச்சரிக்கை விடுத்தார். (ஒ-இ)

## ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்., ஏப். 27

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டைப் பகுதியில், உயிர்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்களில் ஒருவர் 21 வயதுடையவர். அவரிடம் இருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்றும், மற்றையவர் 24 வயதுடையவர் அவரிடமிருந்து 30 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்குமேடையில் ஏற்ற கர்தினால் பிரயத்தனம்!

## மைத்திரி ஆதங்கம்



கொழும்பு, ஏப். 27

**உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் என்மீது தூக்குத்தண்டனை நிறைவேற்றப் படவேண்டும் என்றே கர்தினால் மல்கம் ரஞ்சித் விரும்புகிறார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் கத்தோலிக்க திருச்சபை பொறுமையைக் கடைப்பிடிக்கத் தவறியுள்ளது.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் மூலம் இதுவரை உறுதியான முடிவுகள் எவையும் எட்டப்படவில்லை.

விசாரணைகளை வேகமாக பூர்த்தி செய்து என்னை சிறைக்கு அல்லது தூக்கு மேடைக்கு அனுப்ப கர்தினால் ஆசைப்படுகின்றார் - என்றார். (ச-இ)

# ஹெரோய்னுடன் கர்ப்பிணி கைது!

யாழ்ப்பாணம், ஏப். 27

நீர்வேலியில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் நான்கு மாத கர்ப்பிணிப்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி, நீர்வேலி வடக்கிலுள்ள வீடொன்றில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட வேளை, அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 3 கிராம் 150 மில்லி கிராம் ஹெரோய்ன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. அதனையடுத்து 23 வயதான 4 மாத கர்ப்பிணித் தாய் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ-14-125)

# கட்டுப்பாட்டை இழந்து மோ.சைக்கிள் விபத்து

## பொலிஸ் உத்தியோகத்தர் சாவு

கொடிகாமம், ஏப். 27

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்திலுள்ள காணியினுள் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த கோ.கஜீபன் (வயது-25) என்பவரே விபத்தில் உயிரிழந்தவர்.

படுகாயமடைந்தவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ச-159-9-26)



# விவசாயக் கிணற்றுக்குள் விழுந்த யானைகள் மீட்பு!

முல்லைத்தீவு, ஏப். 27

முள்ளியவளைப் பகுதியிலுள்ள விவசாயக் கிணற்றுக்குள் விழுந்த யானைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

களிக்காடு கிராமத்தில் உள்ள விவசாய கிணற்றில் தாய் யானை ஒன்றும் இரண்டு குட்டிகளும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விழுந்து காணப்பட்டதை விவசாயிகள் அவதானித்தனர். யானைகள் கடந்த திங்கட்கிழமை இரவு விழுந்திருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டது. தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானைகளை மீட்டு காட்டில் விட்டனர். (ஒ-14-19)

# 4 மாதங்களுக்குள் 9 நில அதிர்வுகள்

## புவிச்சரிதவியல் பணியகம் அறிக்கை

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 9 நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. 4 மாதங்களுக்குள் 9 தடவைகள் நில அதிர்வுகள் பதிவாகிய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். பெரும்பாலான நில அதிர்வுகள் நாட்டின் உட்பகுதியில் பதிவாகியுள்ளதுடன், சில கடற்பிராந்தியத்தில் பதிவாகியுள்ளன. (ஒ-14-இ)

# பேர்ள் கப்பல்; பாதிப்பு நஷ்டஈடு கோரி வழக்கு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்டஈடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சிங்கப்பூரின் எக்ஸ்பிரஸ் பேர்ள் என்ற கப்பல், கடந்த 2021 ஆம் ஆண்டு மே 20 அன்று இந்தியாவின் குஜராத்தில் இருந்து பல கொள்கலன்களுடன் கொழும்பு நோக்கிப் பயணித்த வேளை தீ விபத்துக்குள்ளாகியது.

கொழும்பில் நங்கூரமிட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ, கப்பலின் எல்லா பாகங்களுக்கும் பரவியதால் ஏராளமான கொள்கலன்கள் கடலில் விழுந்தன.

அத்துடன் கொள்கலன் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் மூழ்கியது. இதனால் ஏற்பட்ட சூழல் பாதிப்புகளுக்காக நஷ்ட ஈடு கோரியே சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக [illegible] தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)




**கொஞ்சநாளைக்கு முதல் வலிகாமம் வலயத்தில இருக்கிற ஒரு மகளிர் பள்ளிக்கூடப் பிரச்சினை பற்றி பட்சி சொல்லியிருந்ததெல்லோ. மாஸ்ரர் ஒராள் 'டபிள் மீனிங்கில' படிக்கிற பிள்ளையளோட கதைச்சு, ஆய்க்கினை குடுக்கிறார் எண்டு சொல்லியிருந்திச்சுப் பட்சி. ஆனாலும் இந்த விசயத்தில இன்னொரு பக்கமும் இருக்கெண்டு பிறகு கிடைச்ச தகவல்களில தெரிய வந்திருக்கு. அதையும் சொல்ல வேண்டியது பட்சியின்ர கடமைதானே.**

**தென்னாசியாவிலேயே பிள்ளையள் தங்கிப் படிக்கிற விடுதியோட கட்டின முதலாவது பள்ளிக்கூடம் எண்ட பேரும் புகழும் கொண்ட இந்த ஸ்கூலில கொஞ்சக்காலத்துக்கு முதல் இன்னொரு 'பேமஸான' மாஸ்ரர் படிப்பிச்சவர். பஞ்சமருக்காக குரல் குடுத்த பமிலில இருந்து வந்தவர். அவர்தான் இப்ப நடக்கிற பிரச்சினையை வெளியில முதன்முதலா வீடியோவில பேசி வெளியில கொண்டந்திருக்கிறார். தங்கட ஸ்கூலில நடக்கிற அநியாயத்தை இப்பிடித் துணிஞ்சு வெளியில கொண்டந்திருக்கிறார் எண்டு எல்லாரும் ஆளுக்கு புகழ்மாலை. ஆனா இதுக்குப் பின்னால இன்னொரு அரசியல் இருக்கு. இந்தப் பள்ளிக்கூடத்தில கொஞ்சக் காலத்துக்கு முதல் இருந்த பிரிசின்பலை மாத்தினவை. அப்ப அந்தப் பிரின்சிபலுக்கு ஆதரவா ஒரு போராட்டம் நடந்தது. அதுக்கு இந்த மாஸ்ரர்தான் முன்னுக்கு நிண்டவர். அதுக்குப் பிறகு பழைய பிரின்சிபல் போய், புது ஆள் வந்தவுடன இவரும் பிரச்சினைப்பட்டு வெளியில வந்திட்டார். ஆனால் எப்பிடியும் திரும்ப ஸ்கூலுக்கு படிப்பிக்க போயிடலாம் எண்டு மாஸ்ரர் கணக்கியல்ல சமன்பாடு போட்டிருக்கிறார். ஆனால் அது பிழைச்சுப் போச்சு. இந்த மாஸ்ரருக்குப் பதிலா புதிசா ஒருத்தரைக் கொண்டந்து, அவருக்கு 'பேர்மெனண்ட்' நியமனமும் குடுத்திட்டினம்.**

**அதுக்குப் பிறகுதான் பழைய மாஸ்ரர் மண்ணெண்ணெய் பட்ட சாரை மாதிரி, துடிச்சுப் பதைச்சு தனக்குப் பதிலா அப்பொயின்ட்மெண்ட் குடுபட்ட மாஸ்ரர் செய்த லீலையளை வெளியில கொண்டந்திருக்கிறாராம். புது மாஸ்ரரால பாதிக்கப்பட்ட பிள்ளையளின்ர பெற்றோர், சேட்டை விடுற மாஸ்ரரை மாத்தச் சொல்லிக் கேக்காமல், 'பழைய சேரைக் கொண்டு வாங்கோ' எண்டுதான் கேட்டிருக்கினம். அப்பதான் இதுக்குப் பின்னால பழைய மாஸ்ரர் நிண்டு விளையாட்டுக் காட்டுறார் எண்டு விளங்கிச்சுதாம். அதாலதான் 'சேர்டிபிக்கெட்டை எடுத்துக்கொண்டு போங்கோ' எண்டு பிரிசின்சிபல் சொல்லியிருக்கிறா. அதோட இன்னொரு கொசுறுத் தகவல்: பழைய மாஸ்ரரும் இதேமாதிரி பிள்ளையளோட 'டபிள் மீனிங்' 'கேக் தீத்துறது' எண்டு பள்ளிக்கூடத்தில முந்தி கடும் பேமஸ் எண்டு பள்ளிக்கூடக்காரர் சொல்லிச் சிரிக்கினம். அப்ப பள்ளிக்கூடத்தில படிப்பைத் தவிர உதுகள்தான் வலு கலாதியா நடக்குது போல.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா. போதனா மருத்துவமனையில்

# குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 27

குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் உடனடியாக குருதிக் கொடையாளிகள் முன்வந்து குருதிக்கொடை வழங்கவேண்டுமென யாழ்.போதனா மருத்துவமனை குருதி வங்கி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதி வழங்கல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியில் இருக்க வேண்டிய குருதியின் அளவு 330 பைந்த். தற்போது 81 பைந்த் அளவிலேயே குருதி உள்ளது. கையிருப்பு போதாமையால் நோயாளர்களுக்கு குருதி வழங்கமுடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக குருதிக்கொடை முகாம்களை நடத்தி குருதி சேகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் தினமும் குருதி விநியோகம் அதிகரித்துச் செல்கின்றது. சேகரிப்பை விட வழங்கல் கூடுதலாக காணப்படுகின்றது.

ஆகவே குருதிக் கொடை செய்வதற்கு வடக்கு மாகாணத்திலுள்ள இளையோர் முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு 077 2105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்தலாம் என யாழ்.போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. (ச-66)

# திறன்விருத்தி போட்டிகள்

சாவகச்சேரி, ஏப். 27

தென்மராட்சிப் பிரதேச கலாசார அலகின் ஏற்பாட்டில் "மாண்புறு மாணவ சமுதாயம்" என்னும் தொனிப் பொருளிலான திறன் விருத்திப் போட்டிகள், இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன. இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பேச்சு, கட்டுரைப் போட்டிகளும், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுவரொட்டி, ஓவியப் போட்டிகளும் இடம் பெறவுள்ளன. போட்டிகளில் தரம் 6, 7, 8 ஆகிய வகுப்பு மாணவர்கள் மத்திய பிரிவிலும் தரம் 9,10,11 ஆகிய வகுப்பு மாணவர்கள் மேற்பிரிவிலும் பங்குபற்றமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14,9)

# நடமாடும் சேவை

சாவகச்சேரி, ஏப். 27

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் ஆகியவற்றின் பதிவு தொடர்பான நடமாடும் சேவை இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச மேலதிக பதிவுகாரர் அலகால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் சேவையில் பிரதி பதிவாளர் நாயகம் கலந்து கொள்ளவுள்ளதால் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனைத்து மக்களும் கலந்துகொண்டு சேவையைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-14,9)



காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்துக்கு புதிய பொலிஸ் அத்தியட்சகராக எம். டபிள்யூ. சந்தன கமகே தனது கடமைகளை கடந்த திங்கட்கிழமை பெறுப்பேற்றார். (ஒ-14,23)



சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக எம்.எப்.எம்.பிர்டவுஸ் அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றார். இவர் முன்பு பருத்தித்துறை, தெல்லிப்பழை, வல்வெட்டித்துறை, வத்தளை, கொழும்பு ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார். (ஒ-14)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்




உழைப்பால் உயர்வை நாடும் உத்தமர் நீங்கள். உங்கள் ராசிக்கு 3வது ராசியில் சோபகிருது புத்தாண்டு பிறக்கிறது. முடியாததை முடித்துக் காட்டுவீர்கள். சலிப்பும் சோர்வும் நீங்கும் தைரியம் தன்னம்பிக்கை பிறக்கும். பண வரவு உண்டு.

21.4.2023 வரை உங்களின் தனபூர்வ புண்ணியாதி பதியான குருபகவான் 5ம் வீட்டில் நிற்பதால், அறிஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள். குலதெய்வக் கோயிலைப் புதுப்பிக்க உதவுவீர்கள். பூர்வீகச் சொத்தை சீர்செய்வீர்கள். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

22.4.2023 முதல் வருடம் முடியும் வரை குரு 6ம் வீட்டில் மறைவதால், செலவுகளும், அலைச்சலும், எதிர்ப்புகளும் வந்து நீங்கும். குடும்பத்தில் வீண் குழப்பங்கள் வரும்.

21.4.2023 வரை உங்களின் தனபூர்வபுண்ணியாதி பதியான குருபகவான் 5ம் வீட்டில் நிற்பதால், அறிஞர்களின் நட்பால் சாதிப்பீர்கள். குடும்பத்தில் வீண் குழப்பங்கள் வரும். சிலர் உங்களைத் தவறான பாதைக்குத் தூண்டுவார்கள்.

ஆண்டு தொடக்கம் முதல் 25.8.2023 வரை மற்றும் 20.12.2023 முதல் வருடம் முடியும் வரை சனி 4ல் அமர்வதால் தாயாருக்கு நெஞ்சு வலி வந்து போகும். வீண் செலவுகள். அலைச்சல்கள் ஏற்படும். ஒரு சொத்தை காப்பாற்ற மற்றொரு சொத்தை விற்க வேண்டி வரும்.

யாரையும் முழுமையாக நம்பவேண்டாம். எவரிடமும் சொந்த விஷயங்களைப் பகிர வேண்டாம். வருங்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். அரசியல் வாதிகள் வீண் விமர்சனத்தைத் தவிர்க்கவும். 26.8.2023 முதல் 19.12.2023 வரை சனி 3ல் நிற்பதால் பெரிய திட்டங்கள் நிறைவேறும்.

வருடம் பிறப்பு முதல் 7.10.2023 வரை கேது 12ல் நிற்பதால் வீண் செலவுகள், திடீர் பயணங்கள் அதிகரிக்கும். சேமிப்புகள் கரையும். ராகு 6ல் நிற்பதால் வழக்கில் வெற்றியுண்டு. வெளிநாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும்.

8.10.2023 முதல் வருடம் முடியும் வரை, கேது லாப வீட்டிற்குள் வருவதால் ஷேர் மூலம் பணம் வரும். திடீர்யோகம் உண்டு. மூத்த சகோதரர்கள் பாசமாக இருப்பார்கள். சொத்துச் சிக்கல்களுக்குத் தீர்வு கிட்டும். ராகு 5ல் இருப்பதால் பிள்ளைகளால் அலைச்சல் உண்டு.

வியாபாரிகளே! ஆடி, ஆவணி மாதங்களில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள்.

உத்தியோகஸ்தர்களே! நீங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும் நெருக்கடிகள் நீங்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு ஏற்றத் தாழ்வுகளைக் கொடுத்தாலும், நிறைவில் புதிய மாற்றங்களைத் தருவதாக அமையும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். உறவினர்களுடனும் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பதற்றம் தவிர்க்கவும்.

**கன்னி:** தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைக்கும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம் :** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். ஆறுதல் தரும் செய்தி கிடைக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மீனம்:** மனஉறுதியுடன் செயற் படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தொடர்போராட்டமே தீர்வு தரும்

**பொ**துமுடக்கப்போராட்டத்துக்கு தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களை விட இம்முறை கூடியளவு ஆதரவு கிடைக்கப்பெற்றதை அவதானிக்க முடிந்திருந்தது. பொதுமுடக்கத்துக்கு பங்களிப்புச் செய்ததுடன் மக்களின் வகிபாகம் முடிந்துவிடவில்லை. பொதுமுடக்கத்துக்கான கோரிக்கை நிறைவேறும் வரையில் போராட்டங்கள் வெவ்வேறு வடிவங்களில் தொடரவேண்டும். தொடர்போராட்டங்களால்தான் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஆட்சியாளர்களை அசைத்துப் பார்க்க முடியும். அதுவும் ரணில் விக்கிரமசிங்க போன்ற குள்ளநரிகளுடன் மோதுவதானால், சாணக்கியத்துடன்தான் தொடர்போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். தமிழர் தேசம் தொடர்போராட்டத்தை முன்னெடுக்க முடியாதவாறு ரணில் நிச்சயம் பிளவுகளை ஏற்படுத்துவார். தமிழர்களைக் கூறுபோடுவார். அதைத்தெரிந்துகொண்டும் எம்மவர்களும் பிரிந்து நின்று மல்லுக்கட்டுவார்கள். இவற்றையெல்லாம் கடந்துதான் போராடவேண்டும்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழினத்துக்காக எழுச்சியுடன் நடத்திய போராட்டங்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவை. அந்த எழுச்சிப் போராட்டங்களும் மிக நீண்டகாலத் திட்டமிடல்களுடன் போதிய பரப்புரைகளுடன் முன்னெடுக்கப்பட்டன. அந்த எழுச்சிப்பேராட்டங்களின் வீச்சை தமிழ் அரசியல் தலைமைகள் தக்கவைக்கத் தவறின. அந்தப் பெரும்போராட்டங்களின் வெற்றியை எப்படி வாக்குவங்கியாக மாற்றலாம் என்பதில் அரசியல்கட்சிகள் முட்டிமோதியமையால் மக்களுக்கு எழுச்சிப் போராட்டங்கள் மீது சலிப்பு ஏற்பட்டுள்ளது. அதைமாற்றியமைக்கவேண்டும். தமிழின விடிவை இலட்சியமாக வரிந்து கட்டிக்கொள்ளக் கூடிய அரசியல் தலைமைகள், தங்கள் கட்சி அரசியலை இரண்டாம்பட்சமாக வைத்துக்கொள்ளவேண்டும். தமிழின நலனை முன்னிறுத்தி ஓரணியாகவேண்டும். அவ்வாறு தமிழ் அரசியல் தலைமைகள் ஓரணியாவதை சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பப்போவதில்லை. அதேபோன்று தமிழர் விவகாரங்களை வைத்து அரசியல் நடத்தும் எந்தவொரு வல்லரசும் அதை ரசிக்கப்போவதுமில்லை. அவர்களால் உருவாக்கப்படும் பிளவுகள், குழப்பங்கள் என்பன கண்ணுக்குத் தெரியாததாக இருக்கும். தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்திலும் இவ்வாறான முட்டுக்கட்டைகள் இருந்தாலும், தமிழின நலன் என்பதை முதன்மையாக அவர்கள் வரித்துக்கொண்டிருந்தமையால் முட்டுக்கட்டைகளை எல்லாம் தகர்த்தெறிந்தார்கள். அதற்கு அவர்கள் சில முக்கியமான விடயங்களையும் கைக்கொண்டார்கள். விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதற்கு ஒவ்வொரு தமிழனும் ஏன் பங்களிக்கவேண்டும் என்பதையும் அனைவரும் உணரும்விதமாக தொடர் பரப்புரைகளை முன்னெடுத்தார்கள். அவர்களின் புரட்சிப் பாடல்கள், திரைப்படங்கள், கிராமிய மக்கள் சந்திப்புக்கள் என்று தமிழின எழுச்சியை – புரட்சிப்பொறியைத் தக்கவைப்பதற்கு தொடர்ந்து முயன்றுகொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அரசியல் தலைமைகள் ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுப்பது, அந்தப் போராட்டத்தை நடத்துவது என்பதுடன் மட்டுமே அடங்கி விடுகின்றார்கள். போராட்டத்துக்கான கோரிக்கையை வெல்லவைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட அவர்கள் தயாரில்லை. மக்கள் போராட்டத்துக்கு வரவில்லை என்ற காரணத்தைக் கூறுவார்களே தவிர, மக்கள் ஏன் வரவில்லை என்பதை ஆராய்ந்து அதற்குத் தீர்வு தேடமாட்டார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கோரமுகம் பற்றி தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். வடக்கு – கிழக்கு மாகாணங்கள், சிங்கள – பௌத்தமயமாகினால் தமிழின இருப்பு கேள்வியாகும் என்பதும் எம் மக்களுத் தெரியும். எனவே அதைத் தடுப்பதற்கு ஒவ்வொருவரும் போராடவேண்டும் என்பதன் அவசியத்தை நாம் உணர்த்தவேண்டும். ஒரு கைதட்டி ஓசை எழாது. இரு கைகளும் தட்டவேண்டும் என்ற பாலபாடத்தை மக்கள் உணரும் வகையில் அரசியல்கட்சிகள் சொல்லவேண்டும். தமிழின எழுச்சியை தொடர்பரப்புரைகள் ஊடாகத்தான் ஏற்படுத்தவேண்டும். கடந்த காலங்களில் பொதுமுடக்கத்துக்கான அறிவிப்பை ஊடகங்களில் விடுவித்துவிட்டு அரசியல் தலைமைகள் பேசாமல் இருப்பார்கள். ஆனால் இம்முறை வழக்கத்துக்கு மாறாக முக்கியமான நகரங்களில் அரசியல் தலைமைகள் துண்டறிக்கைகளை விநியோகித்தார்கள். இப்படி அவர்கள் களத்தில் இறங்கியமையால்தான் பொதுமுடக்கத்துக்கு கடந்தகாலங்களைவிட ஆதரவு அதிகரித்திருந்தது.

இத்துடன் ஓய்ந்துவிடாமல் மக்களை அணிதிரட்டி தொடர்போராட்டத்தை நடத்துவதற்கும் அரசியல்தலைமைக்ள் துணிச்சலோடு முன்வரவேண்டும். வாக்குக்காக ஒவ்வொரு வீடு வீடாக ஏறி இறங்குவதைப்போன்று மக்களை அணிதிரட்டவும் ஏறி இறங்கத்தான் வேண்டும். தொடர் பரப்புரைகள் ஊடாகத்தான் மக்களிடம் எழுச்சியை உருவாக்கலாம். அதன் ஊடாகத்தான் பொதுமுடக்கத்தின் கோரிக்கைகளை சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்றும் வகையிலான சூழமைவை உருவாக்கலாம்.

நாளொரு நல்வார்த்தை

“அறிவு உங்களுக்கு அதிகாரத்தை வழங்கலாம். குணம் தான் மரியாதையை பெற்றுத் தரும்”

– புரூஸ்லி




# ஆட்சியாளர்களின் வீடுகளை மையப்படுத்தி வீதி சீரமைப்பு

## திறைசேரி இழந்தது 30,000 மில்லியன் ரூபா

**கொழும்பு, ஏப். 27**
**கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தில் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதித் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்பட்ட வீதிகள் அரசியல்வாதிகளின் வீடுகளை மையப்படுத்தியே அமைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஆங்கில செய்தித்தாள் ஒன்று இந்தச் செய்தியைப் பிரசுரித்துள்ளது.
கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கத்தில் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிகள் 5 ஆண்டு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வீதி அமைப்பு ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை அரசியல்வாதிகளுடன் கைகோர்த்துச் செயற்படும் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தனியார் வீதிகளும் கூட அரச செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. அதனால் திறைசேரிக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் வரை சுமார் 30 ஆயிரம் மில்லியன் ரூபா இந்தத் திட்டத்தால் இழப்பு ஏற்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன என அந்தச் செய்தி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# தன்னிச்சை இடமாற்ற உத்தரவை ஏற்கோம்!

## அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27
இடமாற்ற உத்தரவுகளை வழங்குவதற்கு பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் இல்லை என தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக தம்மை இடமாற்றம் செய்ததில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திரா பெர்னாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி தெரியப்படுத்தியுள்ளார். தென் மாகாணத்துக்கு பொறுப்பான தன்னை கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யுமாறு பொது பாதுகாப்பு அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.
பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 7 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அமைச்சின் இந்தத் தீர்மானம் தன்னிச்சையானதும் நியாயமற்றதுமாகும்.
பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்றி வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு தாம் கடமைப்பட்டிருக்கவில்லை என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

நாளை
29.04.2023
வெள்ளிக்கிழமை
சித்திரை 16
சுபநேரம் : 02.58 - 04.28
ராகுகாலம் : 08.58 - 10.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துடுப்பாட்டம், சதுரங்கம் போட்டிகள் சனிக்கிழமை

யாழ்ப்பாணம், ஏப். 27

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படும் கடினப்பந்துத் துடுப்பாட்டம் மற்றும் சதுரங்கப் போட்டிகள், நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1 மணி முதல் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-14)

## ஊடகர் இஷாரா மீது பாலியல் துன்புறுத்து

### விசாரணைக்கு பணிப்புரை

கொழும்பு, ஏப். 27

ஐ.ரி.என். செய்தி நிறுவனத்தில் பணியாற்றிவரும் ஊடகவியலாளர் இஷாரா தேவேந்திர, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளா கியமை தொடர்பில் விசாரணைகளை உடன் ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

செய்தி நிறுவனத்தின் பொது முகாமையாளருக்கு சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் தலைவர் சுதர்சன குணவர்த்தன இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். இஷாரா தேவேந்திர என்ற குறித்த பெண் ஊடக வியலாளர், செய்தி நிறுவனத்தின் மூத்த அதிகாரி ஒருவரால் தொடர்ந்து பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் பாலியல் லஞ்சம் கோரப்பட்டது எனவும் கூறியிருந்தார். அத்துடன் இங்கு பணியாற்றும் பல பெண்கள் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகி வரு கின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார். இதுதொடர்பில் மேலதிகாரிகளிடம் தெரியப்படுத்தப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதன்காரணமாக பணியை விட்டு விலகுவதாக அவர் தெரிவித்திருந்தார். அதற்கமைய இந்த விடயம் தொடர்பில் உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு குறித்த செய்தி நிறுவனத்துக்கு உத்தர விட்டுள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



### அருட்சகோதரி மேரி ஏஞ்சல்ஸ் சவிரிமுத்து தி.கு

இளவாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி ஏஞ்சல்ஸ் சவிரிமுத்து தி.கு (25.04.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 27.04.2023 அன்று வியாழக்கிழமை மு.ப 07.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ் மாகாணத் தலைவி.**

(cs 50201) (N - 1)

## மரண அறிவித்தல்

### சண்முகலிங்கம் சிவராணி



தாளையம்பதி வீதி, நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் சிவராணி (26.04.2023) புதன்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவம் சண்முகலிங்கத்தின் (ஓய்வுபெற்ற மருந்தாளர்) அன்பு மனைவியும், சிவசுந்தரராஜன் அவர்களின் அன்புச் சகோதரியும், தேவமலர் அவர்களின் மைத்துனியும், சிவரூபன் (சட்டத்தரணி), சிவறஞ்சன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தென்மராட்சி), சிவஜங்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் சமுர்த்தி வங்கி, மருதங்கேணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயலக்ஷ்மி, அனுசியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் மருந்து வழங்கல் பிரிவு - யாழ்ப்பாணம்), சுரேகா (ஆசிரியை பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயருக்ஷன், கோபிகன், பிரணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2023) பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 958 1741** (cr 39726) (N-1) **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சிதம்பரநாதன் தருமநாயகி

யாழ்.கொக்குவில் மேற்கு, சிவகுரு வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் தருமநாயகி அவர்கள் நேற்றுமுன்தினம் (25.04.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார காலஞ்சென்றவர்களான தருமலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மனைவியும், தாட்ஷாயினி (மீரா-சுவிஸ்), பவதாரணி (மதுரா- அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு தாயாரும், செந்தில் செல்வம் (சுவிஸ்), வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செந்தில்குமரன் (சுவிஸ்), அருள்குமரன் (கணக் காளர் - AMT Markting and Distributors Lion Brewary) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரங்கன் (சுவிஸ்), சாம்பவி (சுவிஸ்), சாகிஷன் (சுவிஸ்), யாதனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பிரேமசுதன் மற்றும் பாலலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், புரந்தகி (சுவிஸ்), கோகிலன் (கொழும்பு), துவாரகி (கனடா), கோகிலவதனி (லண்டன்), லஜித்தா (லண்டன்), வைஷ்ணவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அத்தையும், கோபிநாத் (சுவிஸ்), பிரசன்னாத் (சுவிஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.04.2023) வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**077 790 6325** **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 06 . 1945



உதிர்வு 25 . 04 . 2023

### இராஜேஸ்வரி தேவசேனாதிபதி

திருநெல்வேலி வளாக வீதியைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி தேவசேனாதிபதி நேற்றுமுன்தினம் (25.04.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அளவெட்டி கந்தையா - மனோன்மணி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற சித்தவைத்தியர் செல்லதுரை - நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகளும், தேவசேனாதிபதி (Esty Medicals) அவர்களின் அன்பு மனைவியும், இரவீந்திரன், இரஞ்சினி, தேவநந்தினி, இரவிசந்திரன், சுதாஷினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான நித்தியானந்தம், உருத்திர குமார், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**13 ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.** (CS/502202)AH1 **077 147 4777**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச அரிசிப் பொதிகள் 2ஆம் கட்டம் விநியோகம்!

யாழ்ப்பாணம், ஏப். 27

பொருளாதாரம் நலிவுற்று மக்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கலில் இரண்டாம் கட்டம் நாளை முதல் நாடளாவிய ரீதியில் விநியோகிக்கப்படவுள்ளது. சமுர்த்திப் பயனாளிகள், காத்திருப்போர் பட்டியலில் உள்ளோர், முதியோர், விசேட தேவையுடையோர், சிறுநீரக பாதிப்புக்கு உள்ளானோர் போன்றோருக்கு இரண்டாம் கட்ட அரிசி விநியோகம் இடம்பெறவுள்ளது. முதலாம் கட்ட விநியோகத்தின்போது நிவாரண உதவி கிடைக்காத தகைமையுள்ளோருக்கு இரண்டாம் கட்டம் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# 13 இலங்கையர்கள் சூடானிலிருந்து மீட்பு!

சூடானில் சிக்கியிருந்த இலங்கையர்களில் 13 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ருவிற்றரில் பதிவிட்டுள்ளார்.

சூடானில் 41 இலங்கையர்கள் சிக்கியுள்ளனர் என்று கிடைத்த தகவலுக்கமைய, அவர்களில் 13 பேர் தற்போது மீட்கப்பட்டுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ஒ-14,இ)

THE HALO TRUST

# HR Business Partner, Sri Lanka
## April 2023

HR Business Partner – Sri Lanka
Two-year fixed-term position
Location – Kilinochchi, Northern Province, Sri Lanka
Salary – Attractive salary and benefits

Do you have a passion for working with people, thrive on a challenge and adaptable to change? Do you have experience of HR Business Partnering or HR Management within the INGO sector?

This is a great opportunity to join an established operation in Kilinochchi on a two-year fixed term contract with support from the UK HR team. You will play a key role leading all HR activities for our amazing people, doing amazing things to make the world a safer place. And that's pretty special!

**About Us**
The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organisation (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO is known for its work to clear landmines, but we also lead on dealing with unexploded ordnance, from bullets to aircraft bombs, and we educate communities to keep them safe. We also build safe arms stores and systems for securing guns. HALO was established in Afghanistan in 1988 and now employs over 9,500 staff in 28 countries and territories.

We are extremely proud of the work we do and the people in our team. For us all, it is more than just a job. It is a shared purpose.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,300 staff working in the Northern Province. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. The explosive ordnance contamination is a result of over three decades of civil war that ended in 2009. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

**About the role:**
As a senior leadership role, the primary responsibility of the HR Business Partner (HRBP) is to lead, manage and motivate all support services on a large programme. The HRBP will review, assess and, over time, improve existing support systems. The successful individual will have a mandate to develop these departments as they see fit in line with the programme strategy set by the Programme Manager (PM), the organisational strategy, and in support of all HALO Sri Lanka operations. There will be a requirement to train new and existing staff and develop the support capacity of the programme.

Key Working Relationships: The HRBP will report directly to the Programme Manager and will work closely with the Deputy Programme Manager, Operations Manager and Donor Relations Manager as well as the managers of the teams for which they are responsible in Sri Lanka. The Head of Region (UK based) would be the second reporting officer and the Director of HR UK based) will provide professional support and be a sounding board for decision making as required.

Responsible for: The HRBP will have direct line management responsibility for the managers of the HR & Admin department as well as the programme's Safeguarding Officer.

**Responsibilities:**
Line manage HR & Admin department:
- Create a culture of continuous improvement and review HR policies, systems and practices ensuring programme compliance with all relevant local legislation and working with external legal advisors
- Design and implement a leadership skills training programme for national staff
- Lead the roll-out of HALO's global staff survey on the programme
- Monitor attendance and oversee issuance of disciplinary action in line with the pro gramme's disciplinary policy
- Oversee the recruitment of national staff positions; support the recruitment of international staff positions
- Advise on compensation strategy and appraisal process as needed
- Ownership of HR database – oversee its development and implementation

**Support to Staff Livelihood Transition strategy:**
As Sri Lanka approaches the final stages of mine clearance, HALO is developing its Staff Livelihood Transition strategy, in line with Sri Lanka's National Mine Action Strategy 2023-2027, aimed at ensuring sustainable livelihoods for our staff following completion. HALO will identify training and professional development courses that match both the skills of our workforce as well as the demands of the local labour market. The HRBP will:

- Coordinate and oversee the design and implementation of capacity building and vocational training opportunities linked to the implementation of the Staff Livelihood Transition Strategy and the wider HALO Sri Lanka Programme Strategy, in line with the National Mine Action Strategy.
- Lead or support assessment of labour market absorption capacities in Northern Province in Sri Lanka and staff surveys
- Identify and nurture partnerships with local businesses and institutions for vocational training and job placement opportunities.

Act as safeguarding focal point:
- Manage the programme's safeguarding policies, processes, and practices together with Safeguarding Officer, including ensuring compliance with HALO's global safeguarding policy.
- Lead on or support safeguarding investigations and ensure timely reporting and record keeping
- Develop and maintain relationships with Mental Health and other counselling service providers in HALO's area of operations for staff referral,
- Provide capacity building training to the programme's Safeguarding Officer and oversee the delivery of safeguarding training to programme staff.
- Work with the global safeguarding lead to develop suitable training material for the Sri Lanka programme

Support to programme logistics:
- Oversee visa application processes for international staff and HQ visitors to the programme.
- Manage the coordination of international travel arrangements for all staff and track external visitors to the programme. Provide familiarisation and programme briefs to visitors on arrival.
- Participate actively in country programme management and strategy meetings with other members of the senior management team.

**Who we're looking for:**

**SKILLS AND EXPERIENCE**

**Required**
- Experience in all aspects of HR management, university degree in relevant field and/or professional certification preferred (e.g., CIPD)
- Significant experience in HR management in INGO in an international setting, preferably working on programmes of +1,000 staff
- Experience in implementation of HR database systems
- Project management experience
- Have proven experience of leading safeguarding in the humanitarian sector, across a diverse workforce, ideally including experience in designing and delivering safeguarding training
- Advanced Microsoft Office skills
- Resilient, adaptable, and able to work comfortably in a post-conflict rural setting.
- Demonstrated management and leadership skills
- Collaborative working and communication style
- Fluent English speaker with very strong written English
- Strong numeracy skills and data analysis skills
- Good cultural awareness, able to adapt to collaborating with different people
- A self-starter, able to organise and manage their own time and lead a team to deliver quality work in a timely fashion
- A practical and adaptable person, prepared to work in a challenging and fluid operating environment

**Desirable (not essential)**
- Previous work experience in South Asia
- Tamil language proficiency
- Knowledge of Sri Lankan labour law
- Experience in humanitarian mine action

The HALO Trust is an Equal Opportunity Employer and does not discriminate against any applicant for employment because of age, disability, gender reassignment, marriage and civil partnership, pregnancy and maternity, race, religion or belief, sex, or sexual orientation.

The HALO Trust is committed to a culture that is both diverse and inclusive and we seek to recruit, develop, and retain the most talented people form a diverse candidate pool.

If you wish to apply, please submit your CV **(no more than 2 pages)** and a covering letter (no more than one page). https: //apply.workable.com /the-halo-trust/j/031DF00AC3/?utm medium=social share link

Closing date for applications will be **8th May 2023**. We reserve the right to close the advert earlier that the advertised closing date.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

## நமசிவாயம் யோகரத்தினம்

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையில்
**நிறைவேற்று உத்தியோகஸ்தராகக்**
கடமையாற்றி நேற்று **(26.04.2023)**
**புதன்கிழமை ஓய்வுபெற்று இன்று**
**(27.04.2023) வியாழக்கிழமை**
**அறுபதாவது அகவையினைக்**
கொண்டாடுகின்ற
**நமசிவாயம் யோகரத்தினம்**
அவர்களுக்கு மணிவிழா
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன்
ஒய்வுகாலம் சிறக்க எல்லாம் வல்ல
பாலகணபதியின் பாதாரவிந்தங்களை
வேண்டுகின்றோம்.




**வாழ்த்துவோர்:–**
**துரைராஜா நாகேஸ்வரி குடும்பத்தினர்.**
**இராஜகேந்திரா, அல்வாய்**

(CS/24620)AH-1

---

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 27 . 05 . 1961



**மறைவு** 30 . 04 . 2020

## அமரர் சண்முகநாதன் சத்தியவரதன்
**(சந்திரன்)**

ஆண்டுகள் மூன்று ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே- நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவன் உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்வு
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமப்பா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளி விளக்கே...

**"சத்தியகிரி"**
**செட்டி லேன், இணுவில் மேற்கு.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

---

# 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**மலர்வு** 06 . 04 . 1939



**உதிர்வு** 28 . 04 . 2012

## அமரர் திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு

**திதி:– சப்தமி (27.04.2023)**

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் பதினொன்று கடந்தாலும் உன் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**நினைவுகளுடன்...**

"மாதர் வளவு"
மல்லிஒடை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 50198)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியச் சுற்றுலாவிகள்

# இந்திய ரூபாவை பயன்படுத்தலாம்

## இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

இலங்கைக்குப் பயணம் செய்யும் இந்தியச் சுற்றுலாவிகள் உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழிற்றுறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த இணைய நிகழ்வு ஒன்றில் கருத்துரைத்த போதே இதனைத் தெரிவித்தார்.

நிர்ணயிக்கப்பட்ட நாணயமாக இந்திய ரூபாவை உருவாக்குவது, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக தீர்வுக்கு உதவுவது மட்டுமல்லாமல், இலங்கைக்கு வருகை தரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் பரிவர்த்தனைகளுக்கும் பயன்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

# உயர்தர விடைத்தாள் மதிப்பீடு; 12,000 ஆசிரியர்கள் இணக்கம்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 27

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்கு இதுவரை 12 ஆயிரம் ஆசிரியர்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக வழங்கப்படும் உதவித்தொகை போதாது எனக் கூறி ஆசிரியர்கள் பணியிலிருந்து விலகியிருந்தனர்

ஆசிரியர்கள் கோரிய உதவித்தொகையை வழங்க கல்வி அமைச்சு சம்மதம் தெரிவித்ததையடுத்து, மீண்டும் விடைத்தாள் மதிப்பீட்டுக்குச் செல்ல ஆசிரியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை எந்த நேரத்திலும் மதிப்பீடு செய்வதற்கு ஆசிரியர்கள் தயாராக உள்ளனர்- என்றார். (ஒ-14,இ)

# பேர்ள் கப்பல் விவகாரம்; லஞ்சம் பெற்றவர் சாமர


## நீதியமைச்சர் பதிலளிப்பு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான நட்டஈட்டை பெறுவதற்காக தொடுக்கப்படும் வழக்கைத் தடுப்பதற்கு 250 மில்லியன் டொலரை லஞ்சமாகப் பெற்றவர் சாமர குணசேகர என்பவரே என தகவல் கிடைத்துள்ளது. ஆயினும் சாட்சியம் கிடைக்கவில்லை.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 04 . 1940



மறைவு 26 . 04 . 2023

## கந்தையா நவரத்தினம் (வர்த்தகர்)

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் நேற்று (26.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற புஸ்பம் அவர்களின் அன்புக் கணவரும், தாட்சாயினியின் (கனடா) அன்புத் தந்தையும், பொபி கஜேந்திராவின் அன்பு மாமனாரும், நோலனின் அன்புப் பேரனும், திருநாவுக்கரசு தனேஸ்வரி, இராமநாதன் பூரணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 844 8740


(CS 24634)A-1

# மரண அறிவித்தல்

உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய பிரதம குரு, தேசமான்ய த்ரியம்சத் குண்ட விற்பன்னர், கிரியா கிரம ஜோதி, ஆகம கிரியா தத்துவநிதி, சிவாகம வித்தியாபானு, கிரியா கலப முத்தாமணி, கிரியாலங்கார பாவலர், கும்பாபிஷேக உத்தம ரத்தினம் அம்பிகை அருள்மணி சிவகமச் செம்மல்

## சிவஸ்ரீ இரத்தின பாலகிருஸ்ணக் குருக்கள்

பாடசாலை வீதி, கயரூரர்



கெருடாவில் தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ இ. பாலகிருஸ்ணக் குருக்கள் நேற்று (26.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பாலகிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும், இரத்தின சாமிக்குருக்கள் மகேஸ்வரி அம்மாவின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியக்குருக்கள் ராசாத்தி அம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அமரர் இராமச்சந்திரன் ஐயா, மகேஸ்வரக் குருக்கள், பாஸ்கரக்குருக்கள் ஆகியோரின் அன்பு சகோதரரும், நரேந்திரக் குருக்கள், நகுலேஸ்வரக் குருக்கள், கம்ஷாயினி, வாருணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ந.சசிரேகா அவர்களின் அன்பு மாமனாரும், பரத்விஜன், சகஸ்ரலகரி, சாகித்தியன் ஆகியோரின் அன்பு பேரனும், பிருந்தாவன், ஹசீலன், மௌனிகா, சதுர்ஸ்மிதா, அஹரன் ஆயோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2023) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆலய அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தர்மகர்த்தா சபை,
உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை,
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில்.

(CS 24635)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவமனைக்கு...

பங்குனித் திங்கள் தினமான ஏப்ரல் 10ஆம் திகதி புத்தூர் சந்தியில் அமைக்கப்பட்ட தாகசாந்தி நிலையத்தில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு பிறருக்கு இடையூறாக சத்தமாக பாடல்கள் இசைக்கப்பட்டுள்ளன. அதனால் தமது சேவைகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதாக புத்தூர் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புப் பிரிவினர், தாகசாந்தி நிலைய ஏற்பாட்டாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர். எனினும், மருத்துவத்துறையினரின் கருத்தைப் பொருட்படுத்தாமல் தொடர்ச்சியாக சத்தமாகப் பாடல்கள் ஒலிக்க விடப்பட்டுள்ளன. அத்துடன், குழுவொன்று மருத்துவரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதுடன் அவரின் அலுவலகத்துக்கும் சேதம் விளைவித்தது. இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. இதையடுத்தே இந்தக் குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## காயங்களோடு...

நாயும் நேற்றையதினம் உயிரிழந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் ஐந்து பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டு அவர்களிடமிருந்து நகைகள் கொள்ளையிடப்பட்டன. 100 வயதுடைய மூதாட்டி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தக் கொலைகளின்போது தனது எஜமானின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப் போராடிய நாயும் வெட்டுக் காயங்களுக்கு உள்ளானது. இந்த நிலையில் அந்த நாய் நேற்று மாலை உயிரிழந்தது.

கொலைச் சந்தேகநபர் பொலிஸாரால் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## 1,710...

டிருந்த ஆயிரத்து 710 சோடாப் போத்தல்கள் யாழ். நகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளன.

காலாவதியான சோடாப்போத்தல்கள் மோசடியான வகையில் திகதி மாற்றம் செய்யப்பட்டும், திகதிகள் அழிக்கப்பட்டும் கடைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது என்று யாழ். நகர பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே மேற்படி சோடாப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த விநியோகஸ்தருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## தந்தை செல்வா...

தாங்கிக்குரிய செப்பிலாலான இணைப்பு என்பன திருடப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் நினைவுதினம் நேற்றுப் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போதே அங்கிருந்த இடிதாங்கியும், 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டரும் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது. இதையடுத்தே இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. தந்தை செல்வா சதுக்கத்திலிருந்து சில மீற்றர்கள் இடைவெளியில் பொலிஸ் நிலையம் அமையப்பெற்றுள்ள நிலையில், பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டமை பல்வேறு விசனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-ஒ,14,26)

## பட்டப்பகலில்...

நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் சிறுவர் பூங்காவொன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பார்த்தபோதே நகைகள் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. வீட்டின் சமையலறைக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-125)


## கண்ணீர் அஞ்சலி

### பாலகிருஷ்ணக் குருக்கள்



உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை ஸ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய பிரதம குரு பாலகிருஷ்ணக் குருக்கள் அவர்கள் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

அன்னார் எமது கீரிமலை மாரியம்மன் கோயில் கும்பாபிஷேகத்தின் போது பஞ்ச ஆசாரியர்களுள் ஒருவராக இருந்து கும்பாபிஷேகக் கிரியைகளை சிறப்புற நடத்திய துடன் ஆண்டுதோறும் நடை பெறும் மகோற்சவத்தின்போதும் சர்வசாதகராகவும் இருந்து மகோற்சவத்தை சிறப்புற நடத்தி வந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஸ்ரீ மகாமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
**கீரிமலை.**

(CS 2463 A-1)


## பனைமரக்குற்றிகளுடன் மாதகலில் ஒருவர் கைது!

பனைமரக்குற்றிகளுடன் ஒருவர் மாதகல் பகுதியில் கைது செய்யப்பட்டார் என்று இளவாலை பொலிஸார் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தனர்.

காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் மாதகல் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி பனைமரக் குற்றிகளை ஏற்றிச்சென்றவர் உழவியந்திரத்துடன் கைது செய்யப்பட்டார். இதன்போது 11 பனைமரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் உழவு இயந்திரத்துடன், இளவாலை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ஒ-14,23,125)


## மணிவிழா வாழ்த்து



முப்பது ஆண்டுகாலம்
எம் பள்ளியில்
ஆசிரியப் பணியாற்றி
இன்றுடன்
பணி ஓய்வுபெறும்
மதிப்பார்ந்த ஆசிரியை

**திருமதி**
**புஸ்பரூபி கணேசன்**

அவர்களை வாழ்த்துவதில்
பெருமை கொள்கிறோம்.

**சேவைத் தடங்கள்**

**கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை**
1989- 1990 ( தொண்டர் ஆசிரியர்)

**கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை**
1990-2007 (ஆரம்பக்கல்வி ஆசிரியர்)

**கிளி/பரந்தன் அ.த.க.பாடசாலை**
2008- 2009

**கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம்**
2010

**கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை**
2011- 2023

**பாடசாலைச் சமூகத்தினர்.**
**கிளி/சிவநகர் அ.த.க.பாடசாலை**



## அறிவித்தல்

**சீரணி நாகபூசனி அம்மன்**
**வருடாந்த மஹோற்சவ**
**மஞ்சத்திருவிழா-2023**



திருவிழாவில் நடைபெறவிருந்த
மாபெரும் இசை நிகழ்ச்சி,
சிறப்பு தவில் நாதஸ்வர கச்சேரி,
இரவு நிகழ்ச்சிகள் யாவும்
03.05.2023 அன்று நடைபெறாது
என்பதனை விழா உபயகாரரால்
அறியத்தரப்படுகின்றது.

**சீரணி நாகபூசனி அம்மன் மஞ்சத்திருவிழா**
**உபயகாரர்.**
**இ.குமார் (லண்டன்)**

(CR 39727 A-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றம்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால் வீழ்ந்து கிடந்த இலங்கை, இப்போது மீண்டெழுந்து சரியான பாதையில் பயணித்து வருகின்றது. அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பின்னர் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் பேச்சுக்களை ஆரம்பித்தேன். செப்ரெம்பர் மாதம் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான இணக்கப்பாட்டை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்டோம். இதில் ஆறு பிரதான மறுசீரமைப்பு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமையவே, வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் நிதி உறுதிப்பாட்டுக்கான சான்றிதழைப் பெற்றுக்கொண்டோம். இதன் பயன்களைத்தற்போது பார்க்கமுடிகிறது. வெளிநாட்டு வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் நம்பிக்கையை நாம் வென்றுள்ளோம். தற்போது பொருளாதார நிலைத்தன்மை ஏற்பட்டு வருகிறது. 16தடவைஐ.எம்.எப். நாணயநிதியத்தின் இணக்கப்பாட்டுக்கு வந்து, நாம் முழுமையாகச் செயற்படவில்லை. எனவே, 17ஆவது தடவையில் நிலைபெறு நிலையை அடையும்போது, எமது நீண்டகால பலவீனங்களை இல்லாமல் செய்து, புதிய வேலைத் திட்டத்துக்குச் செல்லவேண்டியுள்ளது. வறியோருக்கான வேலைத் திட்டத்தை நாம் முன்னெடுத்துள்ளோம். உலக வங்கி இதற்கான நிதியை வழங்கியுள்ளது. விசேடமாக இவர்கள் குறித்து கவனம் செலுத்துமாறு உலக வங்கி கூறுகிறது. பொருத்தமானவர்களுக்கு கொடுங்கள். எனினும், தகுதியற்றவர்களை நீக்கவேண்டும். இதனை நாம் செய்யவேண்டும்.

**ஏன் தனியார் மயம்?**

ஏன் சில அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துகிறோம் என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது. தனியாருக்கு வழங்கினால் இதனைவிட (தற்போதுள்ளதை விடவும்) சிறப்பாகச் செயற்படுத்த முடியும் என்று கருதும் நிறுவனங்களையே தனியாருக்கு வழங்குகிறோம். ஒவ்வொரு அமைச்சுகளும் தமக்குத் தேவையான 25 தொடக்கம் 30 வருடங்களாக பல்வேறு வரையறைகளை விதித்துள்ளன. தற்பொழுது பொருளாதாரக் கண்ணோட்டத்தில் வரையறைகளில் எவற்றை நீக்க வேண்டும் எதனை வைத்திருக்கவேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். பசுமைப் பொருளாதாரமும் எமக்கு அவசியமாகிறது. டிஜிற்றல் பொருளாதாரமும் எமக்கு அவசியமாகிறது. இவற்றை உருவாக்குவதுதான் எமது நோக்கமாகும். அவற்றுக்கான பல முன்னெடுப்புகள் இருக்கின்றன. தேசிய பேரவை போன்று பல குழுக்கள் உள்ளன. முழு நாடாளுமன்றத்தையும் அரசாங்கமாக மாற்றவேண்டும். அதற்காக நாம் உழைக்கவேண்டும். அனைவரும் ஒன்றிணையவேண்டும் - என்றார். (அ-ம)

## குளத்தில்...

குளத்தின் துருசுப்பகுதியில் ரவி சந்தோஷ் நீராடியபோது அவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இதையடுத்து அவரைக் காப்பாற்றுவதற்காக ரவி சுமன் சென்றபோது அவரும் நீரில் இழுத்துச் செல்லப்பட்டார் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சடலங்கள் ஊர்மக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன. இறப்புத்தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர் என்று மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ம-125)

## பயங்கரவாத...

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை முழுமையாக ஏற்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் என்னால் உடன்பட முடியாத சில விடயங்கள் உள்ளன. ஒருவரைத் தடுத்துவைத்து விசாரிப்பதற்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம் வழங்குவதை என்னால் ஏற்க முடியாது. அந்த அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருக்கவேண்டும். இவ்வாறு சில விடயங்கள் உள்ளன. அமைச்சரவைக் கூட்டத்தில் அதை நான் கூறியிருக்கின்றேன். இதில் பலருடன் பேசி இந்தச் சட்ட வரைவு திருத்தப்படவேண்டும். சட்டத்தரணிகள் சங்கத்துடனும் பேசவேண்டும். பயங்கரவாதிகளை விசாரித்தல் என்ற பெயரில் அப்பாவிகளை அடைத்து வைத்து விசாரிப்பதை அனுமதிக்க முடியாது' - என்றார். (அ-ம-22)

## அரசில்...

வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி ரணிலுக்கு நேருக்கு நேராகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில், 'நான் சொன்னதைத்தான் செய்வேன். அதனால் நீங்களும் என்னுடன் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தைப் பார்த்துக் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதில் வழங்குகையிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தயவுசெய்து அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பது தொடர்பான ஊகங்களை மேற்கொள்ளவேண்டாம் என்று கோரிக்கை விடுக்கின்றேன். ஐக்கிய மக்கள் சக்திக்கு அரசாங்கத்தில் இணையும் எண்ணம் கொஞ்சமும் இல்லை. நாங்கள் விவாதிப்போம், கலந்துரையாடுவோம். ஆனால், உங்களுடன் (அரசாங்கத்துடன்) ஒருபோதும் இணைந்து நடக்க மாட்டோம் - என்றார். (அ-ம)

## மாநகரசபையை...

குறித்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் யாழ். மாநகர சபையை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்ததுடன் அதனைப் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்தார். இதற்கு எதிராக யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கு கடந்த 4ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், மனுதாரர் சார்பில் முன்னிலையாகியிருந்தார். இதன்போது ஆளுநரின் உத்தரவுக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலக் கட்டளையொன்றை வழங்கி வழக்கை நேற்று வரை ஒத்திவைத்தது. நேற்று வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதையடுத்தே ஆளுநரின் உத்தரவுக்கு எதிரான இடைக்காலக் கட்டளை மே மாதம் 29ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## கச்சதீவுப்...

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். கச்சதீவுக்கு வெளியில் அந்த புத்தர்சிலை கொண்டுசெல்லப்பட்டுவிட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் - என்றுள்ளது. (அ-ம-26)

## அரிசி...

அரிசி திருடி தனது வீட்டாருக்கு உணவு சமைப்பதற்குக் கொடுத்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கோப்பாய்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அயல் வீட்டார் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. கைதான சந்தேகநபருக்கு 22 வயது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

**பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

**தொடர்பு:-076 755 8606 077 638 5683**

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்

* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.

* நன்னீரூற்று

* குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணி களும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



**தொடர்பு:**

**077 4683 354**

**076 9119 371**

**076 7390 413**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி A-9 பிரதான வீதியுடன்** 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து **700M** தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**

(CS 24346) (J-1) (CS 24547)A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு
15.09.1978



உதிர்வு
14.03.2023

கடந்த (14.03.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய
எமது குடும்பத் தலைவர்

## அமரர் திரு. நடராசா கஜந்தன்

(உரிமையாளர்- நியூ மைதிலி ஜுவல்லறி,
சந்தோஷ் ஜுவல்லறி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று **(27.04.2023)** வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் புனித சாட்டித் தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளைமறுதினம் **(29.04.2023)** சனிக்கிழமை மதியம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பலவழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பதாகைகள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

"சந்தோஷ் மஹால்"
இல.270, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 723 4912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: 021 493 0000 - : 021-493.1111 advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.